**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**RLTOP 03/2024**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி–1 சரோஜா–** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) மனு சொத்து மனுதாரருகககு சொந்தமானது என்றால் சரிதான். மனு சொத்தை மனுதாரர் ஜீன் 2022ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அசல் வழக்கில் அளித்த சாட்சியத்தில் மனுதாரர் எனக்கு 3 மாதங்கள் அவகாசம் கொடுத்து, மனு சொத்தை காலி செய்ய வேண்டும் என்றும், தனது சொந்த உபயோகத்திற்கு வேண்டும் என கூறியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3 மாதம் கழித்து மனுதாரர் என்னை காலி செய்ய சொன்னபோது நான் காலி செய்ய மாட்டேன் என மறுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நல்ல இடம் கிடைத்ததும் காலி செய்து விடுவதாக கூறினேன். மனு சொத்தில் எனது மகன்தான் கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் சென்னையில் வசிக்கிறேனா என்றால் இங்கும் இருப்பேன், சென்னையிலும் இருப்பேன்.

2) எனது மகன்தான் வழக்கறிஞரைப் பார்த்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் முழு விபரமும் எனது மகனுக்குத்தான் தெரியும் என்றால் சரிதான். நான் எதற்காக அசல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் மனுதாரர் கடையை காலி செய்ய சொன்னதால், அவகாசம் வேண்டும் என கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன். எவ்வளவு காலம் அவகாசம் கேட்டிருந்தேன் என்றால் குறிப்பிட்டு கேட்கவில்லை, நல்ல இடம் கிடைத்ததும் காலி செய்வதாக சொல்லியிருந்தேன். எனது மகன்தான் தனது தொழிலுக்கு ஏற்றவாறு இடத்தை பார்க்க வேண்டும் என்றால் சரிதான். வாடகை கொடுத்து வருவது குறித்து எனது மகனுக்குத்தான் தெரியும் என்றால் சரிதான். எனது கடைக்கு மேற்கே மனுதாரர்

நகைக்டை வைத்துள்ளார். எனது கடைக்கு மேல்தளத்தில் மனுதாரர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

3) மனுதாரர் நகைக்கடையில் எத்தனைபேர் வேலை செய்கிறார்கள் என்றால் ஒருவர்தான் செய்கிறார். எனது கடையில் எத்தனைபேர் வேலை செய்கிறோம் என்றால் 5 பேர் வேலை செய்கிறோம். மனுதாரர் தனது வீட்டிற்கு போதிய வசதி இல்லை என்றும், எனவே கடையை விரிவுபடுத்த வேண்டும் என கேட்டாரா என்றால் கேட்டார். பின்னிட்டு மனுதாரருக்கு எதிராக நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால், முதலில் அவர்தான் தாக்கல் செய்தார், பின்னிட்டு எனது மகன் தாக்கல் செய்தார். எப்போது மனுதாரர் வழக்கு தாக்கல் செய்தார் என்றால், அவர் 2002 ல் இடம் வாங்கியவுடன் வழக்கு தாக்கல் செய்தார், பின்னிட்டு எனது மகன் வழக்கு போட்டார். நானோ, எனது மகனோ வாடகை செலுத்தியதற்கு ஆவணம் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கடையில் இருந்து 5 நிமிட துாரத்தில் பேருந்து நிலையம் உள்ளது என்றால் சரிதான். 5 நிமிட நடை துாரத்தில் கரூர் வைஸ்யா வங்கி சென்றுவிடலாம் என்றால் சரிதான்.

4) எனது கடைக்கு இடதுபுறம் குருசாமி மருத்துவமனையும், வலதுபுறம் சுதர்சனா கடையும் உள்ளது என்றால் சரிதான். எனது கடைக்கு எதிர்புறம் மற்றும் பக்கவாட்டில் கடைகள் உள்ளது என்றால் சரிதான். எனது கடை உள்ள பகுதி பிரதான பகுதி என்றால் சரிதான். நானும், எனது மகனும் குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால் வாடகை வீடு. எங்களுக்கு சொந்தமாக வேறு இடம் உள்ளதா என்றால் இல்லை. எனது கடை உள்ள பகுதி மையப்பகுதி என்றும், நான் 5 நபர்களை வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றும், எனவே ரூ.15,000/- வாடகை கொடுக்க கடமைப்பட்டிருந்தும், வாடகை செலுத்தவில்லை என்றால், அவர் வாடகை கேட்கவில்லை. இந்நீதிமன்றத்தில் வாடகை வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அசல் வழக்கில் சிறிது காலம் கொடுத்தால் தாவா சொத்தை காலி செய்து கொள்வதாக

சொன்னேனா என்றால் சொன்னேன். எவ்வளவு கால அவகாசத்தில் காலி செய்வேன் என்றால், வேறு இடம் கிடைத்தால்தான் காலி செய்ய முடியும். அதுவரை மனுசொத்தில்தான் இருப்பேனா என்றால் ஆமாம்.

5) நான் மனு சொத்திற்கு உரிய வாடகையும் செலுத்தாமல், கடையையும் காலி செய்து கொடுக்காமல் மனுதாரருக்கு மிகுந்த மன உளைச்சலையும், பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எவ்வளவு காலத்திற்குள் மனுசொத்தை காலி செய்வேன் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, வேறு இடம் கிடைத்தால்தான் காலி செய்ய முடியும். என்ன பிரச்சினை வந்ததால் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், எனது மகனுக்கு எதிராக இந்த மனுவை தாக்கல் செய்ததால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். எனது மகனுக்குத்தான் வரவு செலவு தெரியும் என்றால் சரிதான். எனக்கும், மனு சொத்திற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றும், மனு விபரம் எதுவும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) முதலில் நான்தான் கடையை நடத்தி வந்தேன், தற்போது சென்னை சென்றுவிட்டதால் எனது மகன் கடையை பார்த்து வருகிறார். மனுதாரரிடம் வாடகையும் செலுத்தாத காரணத்தினாலும், மனுதாரருக்கு சொந்த உபயோகத்திற்கு மனு சொத்து தேவைப்படுவதாலும், நான் மனு சொத்தை காலி செய்ய கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**